දුරකථන/தொலைபேசி இல./Telephone Nos.

අමාත්‍යතුමා / அமைச்சர் / Minister — 2784832, 2784807, 2785617

ලේකම් / செயலாளர் / Secretary — 2784812

කාර්යාලය / அலுவலகம் / Office — 2785141-50, Fax: 2784846

ඊමේල්/ஈ-மெயில்/E-mail : isurupaya@moe.gov.lk

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
**Ministry of Education**

ඉසුරුපාය, ශ්‍රී ජයවර්ධනපුර කෝට්ටේ,
බත්තරමුල්ල.
இசுருபாய ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை
பத்தரமுல்ல
"Isurupaya", Sri Jayawardhanapura Kotte
Battaramulla.


ඔබේ අංකය / உமது இல / Your No. ................................

මගේ අංකය / எமது இல. / My No ....ஈடி/01/11/01/04 சமய மற்றும் விழுமியக் கல்விக்கிளை..................

දිනය / திகதி / Date 2012/10/05 ..................................

**சுற்றறிக்கை இல.: 2012/37**

சகல மாகாண பிரதம செயலாளர்கள்
சகல மாகாணக் கல்விச் செயலாளர்கள்
சகல மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்
சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்
சகல கோட்டத்துக்குப் பொறுப்பான பி.க.ப./உ.க.ப.
சகல அதிபர்கள்.

# ஆசிரியர்களின் விழுமியம் மிக்க செயற்பாடுகள் தொடர்பான ஒழுக்க விழுமிய முறைமை மற்றும் பொதுச் சட்டத் தொகுப்பு

## அறிமுகம்

சகல பிள்ளைகளிடமும் இருக்க வேண்டிய பண்புசார் கல்வியினைப் பெற்றுக்கொள்வதற்கான அடிப்படை உரிமையினைப் பாதுகாக்கக் கூடியவாறு சிறுவர் உரிமைக் கொள்கைப் பிரகடனத்திற்கேற்பச் உரிய சிறுவர் உரிமைகளைப் பாதுகாத்து அவர்களது ஆளுமையை விருத்தி செய்யப் பங்களிப்புச் செய்வது சகல ஆசிரியர்களினதும் பொறுப்புக்கள் ஆகும்.

ஆசிரியர்கள் என்பவர்கள் மாணவர்களின் இடம்சார் பெற்றோர்கள் (Loco-Parents) என்ற சட்ட ரீதியான யோசனைகளுக்கு அமைய மாணவர்களின் நலனுக்காகச் செயற்படச் சகல ஆசிரியர்களும் கட்டுப்பட்டுள்ளனர்.

தொழில்சார் உயர் தரத்தினை உறுதி செய்யக் கூடியவாறு மற்றும் பொது மக்கள் தம்மீது காண்பிக்கும் கௌரவத்தினை உறுதி செய்யக் கூடியவாறு தொழில்சார் ஒழுக்க நெறிகள் தம்மால் தயாரிக்கப்பட்டுப் பின்பற்றப்படுவது தொழில்சார் தரத்தின் தேவையாகக் கருதப்படுகின்றது.

தமது செயற்பாடுகளை நிறைவேற்றும் போது எடுக்கப்படும் தீர்வுகள் ஊடாகத் தாம் அனுபவிக்கும் மட்டற்ற சுயாதீனத்தினை அடிப்படையாகக் கொண்டு விழுமியம் சார் தரங்கள் தம்மால் பேணப்பட்டு அதற்கமையச் செயற்படுவது மிக முக்கியத்துவம் வாய்ந்த விடயமாகும்.

சமூக முறைமையின் நேரடிப் பங்காளர்களாக ஆசிரியர்களுக்குள்ள செயற்பாட்டுப் பணிகள் மற்றும் ஆசிரிய தொழில்சார் தரத்தினை இனங்காண்பதற்கும் வழிகாட்டுவதற்கும் ஆசிரியர்களிடம் இருக்க வேண்டிய சுய வழிகாட்டல்கள் மற்றும் சுய ஒழுக்கங்களின் முக்கியத்துவத்தினை அறிமுகப்படுத்துவதற்கும், பல்வேறுபட்ட கால எல்லைக்குள் எடுக்கப்பட்ட முயற்சிகளில் அடைவு மட்டங்கள் உட்படச் சுய விழுமியங்கள், வழிகாட்டல்களுக்காகவும் இந்நூல் தயாரிக்கப்பட்டுள்ளது.

இதனூடாகச் சகல ஆசிரியர்களினாலும் ஏற்றுக்கொள்வதாக எதிர்பார்க்கும் தொழில்சார் சட்டங்களும், விழுமியங்களும் கட்டியெழுப்பப்பட்டுள்ளன.

ஆசிரியத்துவத்திற்காகத் தாபிக்கும் தனியான நிறுவனம் ஒன்றை இவ்விழுமிய முறைமை மற்றும் சட்ட ஒழுங்குகள் தொடர்பில் ஆசிரியர்களை மதிப்பீட்டுக்குள்ளாக்கும் மற்றும் கௌரவிக்கும் கருவியாகவும் பாடசாலை முறைமையின் பண்புசார் தரத்தினை விருத்தி செய்யும் உபகரணமாகவும் பயன்படுத்த முடியும்.

அங்கீகரிக்கப்பட்ட விழுமிய முறைமைச் சட்டக் கோவைகள் ஊடாக ஆசிரியர்களின் அபிமானத்தைப் பாதுகாப்பதும் அச்சட்ட ஒழுங்குகளைத் தெரிந்தே மீறுவதற்கு எதிராக ஒழுக்காற்றுச் செயற்பாடுகளை மேற்கொள்வதற்குமான அடிப்படையினைத் தோற்றுவிப்பதும் இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆசிரியர்களின் ஒழுக்க விழுமியச் செயற்பாடுகள் தொடர்பான விழுமியத் தொகுப்பு முறைமை மற்றும் சட்ட ஒழுங்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தரங்கள், நியாயங்கள் மற்றும் வாசகங்களுக்காகவும் வழங்கப்பட்டுள்ள இலக்கங்களுக்கு அமையத் தேவையானவாறு சுருக்கமான விளக்கங்களை வழங்க முடியும்.

## 1.0. உத்தியோகபூர்வ பெயர்

இவ்வாவணத்தைப் பண்புசார் கல்வியின் நோக்கத்தினை எட்டுவதற்காக ஆசிரியர்களின் விழுமியச் செயற்பாடுகள் தொடர்பான விழுமியக் கோவைகள் மற்றும் சட்டக் கோவையாக அறிமுகப்படுத்த முடியும். எதிர்காலத்தில் இதனைக் கூட்டாக இணைத்து அல்லது தனித்தனியாகக் குறிப்பிட்டுப் பொதுவான சட்டக் கோவையாக அல்லது விழுமியக் கோவையாகக் கருதப்படும்.

## 2.0. வரைவிலக்கணம்

ஆசிரியர் என்று கருதப்படுவோர் மாணவ மாணவிகளின் கல்வி தொடர்பான பொறுப்புக்கள் கொண்ட பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் கல்வித் துறையில் உள்ள கல்விசார் உத்தியோகத்தர்களேயாவர்.

ஒழுக்கவிழுமியம் கொண்ட செயற்பாடுகள் தொடர்பான விழுமிய முறைமையாக அறிமுகப்படுத்தப்படுவது தம்மால் தமக்காக விதிக்கப்பட வேண்டிய நேர்மை, பொறுப்பு மற்றும் முன்மாதிரி, சமூகப் பொறுப்புப் போன்ற நபர்கள் ரீதியிலான ஆசிரியர்களின் சமூகம் எதிர்பார்க்கும் சிந்தனை, பொறுப்புக்கள், பழக்க வழக்கங்களாகும்.

**சட்ட முறைமை** என அறிமுகப்படுத்தப்படுவது சகல ஆசிரியர்களினாலும் கட்டாயமாகப் பின்பற்ற வேண்டிய சட்டக் கோட்பாடுகளாகும்.

## 3.0. நோக்கங்கள்

ஆசிரியர்களுக்கான இவ்விழுமியச் செயற்பாடுகள் தொடர்பான கோவை மற்றும் சட்ட முறைமை இரண்டு நோக்கங்களைக் கொண்டமைந்துள்ளன.

i. நேர்மை, பொறுப்புணர்ச்சி, தொழில் வாண்மையுடன் முன்மாதிரியான, சமூகப் பொறுப்புணர்வுள்ள நபராகவும் ஆசிரியர்களினால் மேற்கொள்ள வேண்டிய விழுமிய தரங்கள் ஒழுக்க விழுமிய முறைமையாகச் சமர்ப்பிக்கப்படுகிறது.

ii. ஒழுக்கமிக்க செயற்பாடுகளுக்காகச் சகல ஆசிரியர்களுக்கும் பொறுப்புக்கள் வழங்கப்படும் வகையில் சட்ட முறைமை ஒன்றைச் சமர்ப்பித்தல்.

## 4.0. பொது நோக்கங்கள் மற்றும் அடிப்படைத்தத்துவம்

பின்பற்றப்பட வேண்டிய சட்ட முறைமைகள் கொண்ட ஒழுக்க விழுமிய முறைமையினைத் தயாரிப்பதன் நோக்கமாக அமைவது பெறுமதி மிக்க தொழிலின் அங்கத்தவர் என்ற வகையில் ஆசிரியரின் கௌரவப் பெயரினைப் பாதுகாப்பதாகும். இவ்விழுமிய முறைமை மூலம் ஆசிரியர்களினால் சுயமான அடிப்படையில் தனக்கு விதித்துக்கொள்ள வேண்டிய விழுமியத் தரங்கள் தயாரிக்கப்பட்டுள்ள போதிலும், இதனை இத்தரங்கள் சேவைக்கான பதவியுயர்வுகள் மற்றும் தேசிய ரீதியில் அங்கீகரிப்பதற்காகவும் மதிப்பீட்டுக்காகவும் பயன்படுத்த முடியும்.

## 5.0. ஆசிரியர்களின் விழுமியம் மிக்க செயற்பாடுகள் தொடர்பான ஒழுக்க விழுமிய முறைமை

ஒழுக்க விழுமியச் செயற்பாடுகள் தொடர்பான ஆசிரிய விழுமியக் கோவை விரிவான முறையில் அமைவது தம்மால் தமக்கு விதிக்கப்பட்டுள்ள செயற்பாடுகளை நேர்மையாகவும், பொறுப்புடனும் முன்மாதிரியாகவும், சமூகப் பொறுப்புக் கொண்டவராக ஆசிரியர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படும் சிந்தனைகள், பொறுப்புக்கள் மற்றும் பழக்க வழக்கங்களாகும்.

இதன் போது எட்டுத் துறைகள் ஊடாக ஒழுக்க விழுமிய முறைகள் கட்டியெழுப்பப்பட்டுள்ளன.

## 5.1. ஆசிரியர்கள் தனிப்பட்ட ரீதியில்

சிறந்த நற்பழக்க வழக்கங்கள், ஒழுக்கங்கள் கொண்ட முன்மாதிரி மிக்க சமூக முன்னோடியாகச் செயற்பட வேண்டும்.

(அ) தாம் சிறந்த தேகாரோக்கியம் கொண்டவராக இருப்பதற்குத் தேவையான ஒழுங்குகள் பற்றி உடற்பயிற்சி மற்றும் சுத்தத்தைப் பேணுதல்.

(ஆ) சகல சந்தர்ப்பங்களிலும் ஒழுக்கம் மற்றும் விழுமியத்தைப் பாதுகாக்கக் கூடியவாறு சுத்தமாக எளிமையான முறையில் ஆடைகளை அணிந்திருக்க வேண்டும்.

(இ) போதை, புகைத்தல், வெற்றிலை சாப்பிடல் போன்ற பழக்கங்கள் மற்றும் பல்வகையான முறைகேடான செயற்பாடுகளில் தவிர்ந்திருத்தல், ஏனையோரையும் தவிர்ந்திருக்க உதவுதல்.

(ஈ) தனிப்பட்ட மற்றும் சமூகச் செயற்பாடுகள் தொடர்பான அபகீர்த்திக்கு உட்பட்டோருடனான பழக்கங்களிலிருந்து விலகியிருத்தல்.

(உ) தாம் பழகும், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் ஏனையோரின் முன்னிலையில் தமது செல்வநிலை, குடும்பத் தரம் மற்றும் உயர் நிலைகளைக் கொண்டோருடனான பழக்கங்கள் தொடர்பாகப் பெருமையுடன் பேசாதிருத்தல்.

(ஊ) தமது செல்வம், குடும்பத் தரம், உயர் பதவிகள் கொண்டோருடனான நட்பு இருப்பதாகக் காண்பித்து ஏனைய ஆசிரியர்கள், மாணவர்களை அச்சத்துக்கு உட்படுத்த அல்லது அவர்களுக்குப் பாதிப்புக்களை ஏற்படுத்தக் கூடியவாறான செயற்பாடுகளில் ஈடுபடாதிருத்தல் மற்றும் அவ்வாறு செயற்படும் நபர்களுக்கு முன்னிலையில் கட்டுப்பாடற்ற பழக்கவழக்கங்களைக் கொண்டிருத்தல்.

(எ) தமது சொந்த வாழ்க்கை மற்றும் சமயம், அரசியல் போன்றவைகள் தொடர்பாகத் தனிப்பட்ட கருத்தினை அங்கீகரிக்க மாணவர்களை வலியுறுத்துவதில் இருந்து விலகியிருத்தல்.

(ஏ) ஏதேனும் பாடங்கள், மொழி அல்லது ஏனைய துறைகள் தொடர்பாகத் தமது விசேட இயலுமைகளை ஏனைய ஆசிரியர்களை இழிவுபடுத்துவதற்காகப் பயன்படுத்தாதிருத்தல்.

(ஐ) சிறந்த கொள்கைகள் கொண்டுள்ளோர் முன்னிலையில் தீவிரவாதக் கொள்கையினைக் கடைப்பிடிக்காது இருத்தல் மற்றும் தீவிரவாத நிலைப்பாட்டில் இருந்து சமநிலை கொண்ட நபராகச் செயற்படல்.

(ஒ) அநீதிகள், முறையற்ற ரீதியில் இழிவுபடுத்தல் மற்றும் அச்சமூட்டல் போன்றவற்றில் இருந்து தமது சகோதர ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள், ஏனையோரைப் பாதுகாப்பதற்காகச் சகல சந்தர்ப்பங்களிலும் தயாராக இருத்தல்.

(ஓ) வகுப்பறை மற்றும் அதற்கு வெளியே மாணவர்களுடன் பழகும் சந்தர்ப்பங்களில் கையடக்கத் தொலைபேசிப் பயன்பாட்டினைத் தவிர்த்துக்கொள்ளல்.

(ஔ) சகல சந்தர்ப்பங்களிலும் சமூக அங்கீகாரங்களைக் கௌரவித்துப் பழக்க வழக்கங்கள் மற்றும் தனிப்பட்ட ரீதியான கௌரவத்துடன் சகல முறைகளிலும் பிள்ளைகள் மற்றும் முழுச் சமூகத்திற்கும் முன்மாதிரியாகச் செயற்படல்.

(ஃ) மனிதர்கள் மற்றும் மிருகங்கள் தொடர்பாக அநீதிகள் இழைக்கப்படும் சந்தர்ப்பங்களில் தமது கவலையினை வெளிப்படுத்தி இயற்கையாக அல்லது மனிதனால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் காரணமாகப் பாதிக்கப்படுவோரை இரக்கத்துடன் நோக்கி அவர்களுக்கு உதவிகளைப் புரிதல்.

## 5.2. ஆசிரியர் பெற்றோருக்குப் பதிலாக

"பாடசாலை மாணவர்கள் தொடர்பில் ஆசிரியர், மாணவர்களின் இடம்சார் பெற்றோர் என்ற சட்டரீதியான சிந்தனையைக் கருத்திற்கொள்ளல்",

(அ) சகல சந்தர்ப்பங்களிலும் பெற்றோர் மற்றும் பிள்ளைகள் தம்மீது வைத்துள்ள நம்பிக்கையினைப் பாதுகாத்தல் மற்றும் பெற்றோர் பாதுகாவலர்கள் தொடர்பில் பிள்ளையின் நம்பகத் தன்மையினை உறுதிசெய்யக் கூடியவாறு செயற்படல்.

(ஆ) குலம், நம்பிக்கை, ஆண் - பெண் பால், சமூக நிலைமைகள், சமயம், மொழி, பிறப்பிடம் ஆகிய காரணிகளைக் கருத்திற் கொள்ளாது சகல மாணவர்களுக்கும் நியாயமாகவும் பக்கச் சார்பற்ற அன்பினையும், கருணை, பாதுகாப்பினையும் வழங்கல்.

(இ) தமது மாணவர்களைத் தமது பிள்ளைகள் போன்று அழைத்தல்.

(ஈ) மாணவர்களுக்கு இருக்கக் கூடிய விசேட தேவைகள், பிரச்சினைகள் தொடர்பில் விழிப்புடன் இருத்தல் மற்றும் அவ்வாறான மாணவர்களுக்குத் தேவையான வசதிகளையும், நிபுணத்துவ ஆலோசனைகளையும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

## 5.3. ஆசிரியர் அறிவு வழங்குபவர், திறமை மற்றும் சிறந்த மனப்பாங்கு விருத்தியாளராக.

அறிவினை வழங்குதல், திறமை மற்றும் சிறந்த சிந்தனையை விருத்தி செய்தலை ஆசிரியரின் அடிப்படைப் பொறுப்பாகக் கருதி ஆசிரியர் கீழ்க்குறிப்பிடப்பட்டவாறு செயற்படல் வேண்டும்.

(அ) ஐக்கிய நாடுகள் சிறுவர் உரிமைப் பிரகடனம் (1989) இற்கமைய சிறுவர்களிடம் இருக்க வேண்டிய உரிமைகளை (விசேடமாகக் கல்வி உட்பட) உறுதிப்படுத்தக் கூடியவாறான செயற்பாடுகள்.

(ஆ) சகல சந்தர்ப்பங்களிலும் சிறந்த தயாரிப்புக்களுடனும் கூடியதாகப் பொறுப்புக்களை நிறைவேற்றல்.

(இ) வழங்கப்படும் அறிவு சரியானது என்றும் பொருத்தமானது என்றும் மாணவர்களுக்கு உரியது என்றும் உறுதிப்படுத்தல்.

(ஈ) விசேடமான கற்பித்தல் தொடர்பில் புனிதமான (Holistic) பிரவேசங்களைப் பின்பற்றல்.

(உ) கற்பித்தல், காலத்துக்குள் கேள்விகளைக் கேட்டல் மற்றும் கலந்துரையாட ஆர்வமூட்டி மாணவர்களின் விழுமியச் சிந்தனைகளை ஊக்குவிக்கச் சந்தர்ப்பம் வழங்குதல்.

(ஊ) பாடத்துக்குரிய மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளத் தேவையான மாணவர்களுக்கு அதற்கான தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் முறைகளைத் தெளிவுபடுத்தல் மற்றும் தம்மால் மேலதிக தகவல்களை வினவுவதற்குச் சந்தர்ப்பம் வழங்குதல்.

(எ) மாணவர்களைச் சுய கற்கைக்கு ஆர்வமூட்டத் தேவையான வசதிகளை வழங்குதல்.

(ஏ) மாணவர்களின் சிந்தனை விருத்தியாளர்களாக மற்றும் அதற்காக ஆர்வமூட்டுபவராகச் செயற்படல்.

(ஐ) எச்சந்தர்ப்பத்திலும் தமது மாணவர்களிடம் நிதியினை அறிவிட்டுக் கற்பிப்பதைத் தவிர்த்தல்.

## 5.4. ஆசிரியர் ஆக்கத் திறன் மிக்கவராகவும் மற்றும் வழிகாட்டுநர் மற்றும் ஆலோசகராகவும்.

ஆக்கத்திறன் மிக்கவராகவும் மற்றும் வழிகாட்டுநர், ஆலோசகராகவும் தமது பொறுப்பின் கீழ்வரும் மாணவர்களுக்காக அதியுயரிய சேவையினை ஆசிரியர்கள் மேற்கொள்ள வேண்டும்.

(அ) இப்பொறுப்புக்களை நிறைவேற்றும் வகையில் அறிவினால், திறமையினால் மற்றும் சிறந்த சிந்தனைகளைக் கொண்டோராகச் செயற்படல்.

(ஆ) மாணவர்களிடம் இருக்க வேண்டிய பின்னடைவுகள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பாகக் கவனத்துடன் இருக்க வேண்டியதுடன் அவ்வாறான பிரச்சினைகளைத் தீர்க்கத் தேவையான நிபுணத்துவ ஆலோசனைகளை வழங்கவும் நடவடிக்கை எடுத்தல்.

(இ) பிள்ளைகள் தொடர்பான பலவீனங்கள் அல்லது பிரச்சனைகள் தொடர்பான இரகசியத் தகவல்களை அப் பிள்ளைகளின் பெற்றோர் மற்றும் சட்டரீதியிலான பாதுகாவலர்களைத் தவிர வேறு எவருக்கும் வெளிப்படுத்தாதிருத்தல்.

(ஈ) பெற்றோருடன் நல்லுறவைப் பேணித் தேவையான சந்தர்ப்பங்களில் அவர்களுக்குத் தமது பிள்ளை தொடர்பிலான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காகத் தம்மை இலகுவாக அண்மிப்பதற்குச் சந்தர்ப்பத்தினை வழங்குதல்.

(உ) எச்சந்தர்ப்பத்திலும் ஆசிரியர் மாணவர் தொடர்புகளை முறையற்ற ரீதியில் பயன்படுத்தாது இருத்தல் மற்றும் மாணவர்கள் துஷ்பிரயோகங்களுக்கு உட்படும் சந்தர்ப்பங்களில் இருந்து தவிர்ப்பதற்கான நடவடிக்கை எடுத்தல்.

(ஊ) சகல சந்தர்ப்பங்களிலும் மாணவரின் அறிவு, திறமை மற்றும் சமூக விழுமிய விருத்திக்கான செயற்பாடுகளை மேற்கொள்ளல்.

## 5.5. ஆசிரியர் மதிப்பீட்டாளராக

மதிப்பீடு மற்றும் கணிப்பீடு கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகளின் மிக முக்கியத்துவம் வாய்ந்த அம்சமாகக் கருதி ஆசிரியர்களினால்

(அ) தொடர்ந்தும் அதற்காகத் தேவையான அறிவினை இற்றைப்படுத்தல் மற்றும் அதனுடன் இணைந்த அறிவு, சிந்தனை, ஆற்றல் விருத்தியினை ஏற்படுத்தல்.

(ஆ) மாணவர்களிடம் இருக்க வேண்டிய கற்றல் பின்னடைவுகள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பில் விழிப்புடன் இருந்து அவற்றுக்குத் தீர்வுகளைக் காண்பதற்குத் தேவையான நிபுணத்துவ ஆலோசனைகள் உள்ளிட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

(இ) மாணவர்கள் தொடர்பில் எதுவித பேதங்களும் இன்றித் தனிப்பட்ட அழுத்தங்கள் இன்றி நெகிழ்வுத் தன்மையுடன் மற்றும் நம்பகத் தன்மையுடன் கட்டியெழுப்பபக் கூடியவாறான மதிப்பீட்டுச் செயற்பாடுகளைச் செய்தல்.

## 5.6. ஆசிரியர் தொழில்சார் உத்தியோகத்தராக

அறிவு மற்றும் திறமைகளைப் பெற்றுக் கொண்டுள்ளமையினால் ஆசிரியர் தொழில்சார் உத்தியோகத்தராகக் கருதப்படுவர்.

(அ) ஆசிரியத் தொழிலுக்குப் பொருத்தமான உயர் சம்பிரதாயங்கள் மற்றும் அதி உன்னத தரத்தினைச் சகல சந்தர்ப்பங்களிலும் பாதுகாத்தல்.

(ஆ) தமது தொழில்சார் அறிவு மற்றும் திறமைகளின் செல்லுபடியாகும் தரத்தினைப் பேணுவதனைப் போன்று கட்டாயமாகச் சமகாலப்படுத்தவும் வேண்டும்.

(இ) கற்பித்தலைத் தொழிலாகக் கருதுவதன் மூலம் ஆசிரியர் சமூகத்திற்குத் தேவையான அறிவு, திறன், மனப்பாங்குகளைக் கொண்டிருத்தல், ஆசிரியர் தமது அறிவுத் திறமைகள் சிந்தனைகளை ஏனையோருக்கிடையே பகிர்ந்து கொள்வதன் மூலம் சகல ஆசிரியர்களினதும் அறிவு, திறமை மற்றும் சிந்தனைகளை விருத்தி செய்வதற்காகவும் ஒத்துழைப்பு வழங்குவதில் தங்கியுள்ளது.

(ஈ) ஆசிரியத் தொழிலுக்குத் தேவையான தகைமை இன்மை தொழிலை அபகீர்த்திக்கு உட்படுத்தும் ஆதலால் ஆசிரியர்கள் தமக்குத் தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்து கொள்ளல் மற்றும் சகோதர ஆசிரியர்களின் சேவை முன்னேற்றத்துக்காகத் தேவையான உதவிகளை வழங்குதல்.

(உ) தேவையான தகைமைகள் மற்றும் தேர்ச்சியற்ற ஆசிரியர்களின் தரத்தினை உயர்த்துவது தொழிலுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் ஆதலால் அவரால் தொழிற் தகைமைகளைப் பூர்த்தி செய்யும் வரை அவர் பதவியுயர்வினை எதிர்பார்க்காது இருத்தல் மற்றும் தகைமை கொண்டோருக்குப் பதவியுயர்வு வழங்கும் செயற்றிட்டங் களுக்கு உதவி வழங்கல்.

(ஊ) தமது தொழில் தொடர்பிலான அபிமானம் மற்றும் உணர்வுடன் செயற்படல்.

(எ) சகல மாணவர்களுக்கும் பண்புசார் கல்வியினை வழங்குவதன் மூலம் பொது மக்களின் நம்பிக்கையினை வெல்லுதல்.

(ஏ) சுயமான அல்லது தொழில்சார் நோக்கங்கள் பயன்களுக்காக மாணவர் சமூகத்தின் வாழ்வுக்கு அல்லது அவர்களது எதிர்காலத்திற்குப் பாதிப்புக்களை ஏற்படுத்தக் கூடிய செயற்பாடுகளில் இருந்து தவிர்ந்திருத்தல் மற்றும் அவ்வாறான செயற்பாடுகளுக்குத் துணைபோகாது இருத்தல்.

(ஐ) மாணவர்கள், ஏனைய ஆசிரியர்கள், உத்தியோகத்தர்கள், பெற்றோர் முன்னிலையில் தம்முடன் சேவையாற்றுவோரை விமர்சிக்காது பாட மற்றும் பாட வெளிச் செயற்பாடுகளில் ஈடுபடும் நிறுவனங்களுக்குள் மற்றும் அதற்கு வெளியே சிறந்த ஒத்துழைப்புடனும் கூட்டுச் செயற்பாடுகளுடனும் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

(ஒ) எதிர்வரும் ஆண்டுக்கான செயற்பாடுகளுக்குத் தேவையான எழுத்து மூல அறிக்கைகள் மற்றும் வாய்மூலத் தகவல்களை உரியவாறு தமது பதிலீட்டாளருக்கு வழங்குதல்.

(ஓ) தொழில்சார் கௌரவத்திற்குப் பாதிப்புக்கள் ஏற்படுத்தக் கூடிய சம்பவங்களை உடனடியாக உரிய தொழில்சார் பொறுப்பாளர்களுக்கு அறிக்கைப்படுத்தல்.

## 5.7. ஆசிரியர் முகாமைத்துவத்தின் பொறுப்பாளராக

(அ) தமது தொழிலுக்குப் பாதிப்புக்கள் ஏற்படாத சட்டங்கள், உயரிய முகாமைத்துவத்தில் தமக்குள்ள பொறுப்புக்கள் தொடர்பாக அறிவுறுத்தல்களை வழங்குதல்.

(ஆ) பாடசாலை மற்றும் அதனுடன் தொடர்புபட்ட கொள்கைகளை வகுத்தல் மற்றும் அமுல்படுத்த உதவுதல்.

(இ) முகாமைத்துவ ஆலோசனைகளைப் பின்பற்றல் மற்றும் பிரச்சினைகளுக்குரிய சந்தர்ப்பங்களில் அது தொடர்பில் அமைதியான செயற்பாடுகளை மேற்கொள்ளல்.

(ஈ) தமது தொழில்சார் செயற்பாடுகள் மற்றும் அவற்றின் பெறுபேறுகள் தொடர்பாகப் பரஸ்பர கௌரவத்தினை ஏற்படுத்தல்.

(உ) சகல கடமைகளையும் உரிய பொறுப்புடன் உரிய செயற்பாடுகள் ஊடாக நியாயமாக மேற்கொள்ளல்.

## 5.8. சமூகம் மற்றும் தேசத்தின் முன்னோடியாகச் செயற்படல்

ஆசிரியர் தொடர்ந்தும் சமூகத்தின் மற்றும் தேசத்தின் முன்னோடியாகக் கருதப்படுவதனால்,

(அ) சமூகத்தின் பிரச்சினைகளை இனங்காணுதல் மற்றும் அப்பிரச்சினைகள் ஊடாக உருவான சவால்களை எதிர்கொள்ளக் கூடியவாறான செயற்பாடுகளில் பிள்ளைகளை ஈடுபடுத்தித் தேசத்தை நேசிக்கக் கூடிய இளம் சந்ததியினரைச் சமூகத்திற்கு வழங்க நடவடிக்கை எடுத்தல்.

(ஆ) பல்வேறுபட்ட சமூகப் பிரிவுகள், சமய மற்றும் மொழிப் பிரிவுகளுக்கு இடையிலான சமாதானத்தினைக் கட்டியெழுப்பக் கூடியவாறு மாணவர்களிடம் சிறந்த பண்புகள் மற்றும் விழுமியங்களை விருத்தி செய்து தேசிய நல்லிணக்கத்தை உறுதிப்படுத்தக் கூடியவாறான செயற்பாடுகளை மேற்கொள்ளல்.

(இ) தமது பாடசாலைக்கு, சமூகத்துக்கு, நாட்டுக்கு மற்றும் தேசத்துக்கு மனப்பூர்வமாகச் செயலாற்றுவதுடன் மாணவர்களையும் அவ்வழிக்கு இட்டுச் செல்லல்.

## 6.0. சட்ட ஒழுங்கு விதிமுறைகள்

இவ் ஒழுக்க விழுமியங்கள் முறைமை சகலரினாலும் பின்பற்றப்பட வேண்டியதுடன் தேவையான ஆலோசனைகளைத் தவறவிடுவோருக்கு எதிராக ஒழுக்காற்றுச் செயற்பாடுகளை மேற்கொள்ளக் கூடியவாறு சட்ட முறைமையும் உள்ளடக்கப்பட்டுள்ளது. இச்சட்ட முறைமையின் கட்டளைகள் தொடர்பான செயற்பாடுகளின் போது அதற்கு வழங்கப்பட்டுள்ள இலக்கத்தினைக் குறிப்பிடல் வேண்டும்.

மாணவர்கள், ஆசிரியர்களினால் பின்பற்ற வேண்டிய விழுமிய முறைமையுள் நேர்மையுடன், பொறுப்புடன் தொழில்சார் தரத்துடன் முன்மாதிரியாகச் சமூகப் பொறுப்புக் கொண்டோராக ஆசிரியர்களிடமிருந்து எதிர்பார்க்கும் சிந்தனைகள், அங்கீகாரங்கள், பழக்க வழக்கங்கள் உள்ளடங்கியுள்ளன. இலகுவான செயற்பாடுகளுக்காக பல்வேறுபட்ட தொனிப்பொருளின் கீழ் கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டுள்ள போதிலும் அதில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஒரு தொனிப்பொருளுக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டதல்ல.

## 6.1. ஆசிரியர் தனிநபர் என்ற அடிப்படையில்

சிறந்த பழக்க வழக்கங்கள், ஒழுக்கங்கள் மற்றும் விழுமியங்கள் கொண்டவராக ஆசிரியரிடமிருந்து எதிர்பார்க்கும் சமூக அபிலாசைகளுக்கு அமைய அவர் கீழ்க்குறிப்பிடப்பட்ட கட்டளைகளைப் பின்பற்றுதல் வேண்டும்.

(அ) மது விற்பனை நிலையங்கள், சூதாட்டங்கள் இடம்பெறும் அபகீர்த்திக்கு உட்பட்ட இடங்களில் நடமாடக் கூடாது.

(ஆ) சூதாட்டம், போதை, புகைத்தல் ஆகிய பழக்கவழக்கங்களுக்கு அடிமைப் பட்டவராக அபகீர்த்திக்கு உட்பட்ட வகையில் செயற்படக் கூடாது.

(இ) சகல சந்தர்ப்பங்களிலும் நேர்மையான செயற்பாடுகள் மற்றும் உண்மையைக் கூறவும் கட்டுப்படுதல் வேண்டும்.

(ஈ) வட்டிக்கு நிதி வழங்குதல், உடற் சுகாதாரத்திற்கு மற்றும் சமூக நலனுக்குப் பாதிப்புக்களை ஏற்படுத்தக் கூடிய செயற்பாடுகளில் ஈடுபடாதிருத்தல்.

(உ) மோதல்களைத் தவித்தல், மனித உரிமை, சிறுவர் மற்றும் மகளிர் உரிமைகள் தொடர்பிலான மூலாம்சங்களைப் பின்பற்ற வேண்டியதுடன் சிறுவர்களை வேலைக்கமர்த்தல், அவர்களைத் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தல் போன்ற முறைகேடான செயற்பாடுகளில் ஈடுபடக் கூடாது என்பதுடன் அவ்வாறான செயற்பாடுகளுக்குத் துணை போகவும் கூடாது.

## 6.2. "ஆசிரியர் பெற்றோருக்குப் பதிலாக"

பாடசாலை மாணவர்கள் தொடர்பில் பெற்றோரின் இடத்தில் ஆசிரியரும் கருதப்படுவதனால் ஆசிரியர் சகல சந்தர்ப்பங்களிலும்

(அ) மாணவர் ஒருவர் அல்லது ஒரு குழுவினருக்கு விசேட நபராக இருக்கக் கூடாது என்பதுடன் எதுவித பேதங்களும் இன்றி சமநியாயத்துடன் சகல பிள்ளைகளையும் கருத வேண்டியதுடன் மேலதிகமாகக் கவனம் செலுத்த வேண்டியோருக்காக விசேட கவனம் செலுத்தவும் வேண்டும்.

## 6.3. ஆசிரியர் அறிவினை வழங்குபவராகத் திறமை மற்றும் சிந்தனை ஆற்றல் கொண்டவராக

அறிவினை ஊட்டுதல், சிந்தனை மற்றும் திறமை விருத்தியினை தமது அடிப்படைப் பொறுப்புக்களாகக் கருதிக் கீழ்க்குறிப்பிடப்படுபவற்றைக் கவனத்துடன் மேற்கொள்ள ஆசிரியர்கள் நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

(அ) தமது பொறுப்புக்களை நிறைவேற்றச் சிறந்த முறையில் தயாராக இருத்தல்.

(ஆ) வழங்கப்படும் அறிவு, திறமை, மனப்பாங்கு சரியானது என்றும் உரியதானது என்றும் பயன்படுத்தும் முறைகள், மாணவ மாணவிகளின் தன்மைக்கு அமையப் பொருத்தமானது என்றும் உறுதிப்படுத்தல்.

(இ) பாடசாலையினைப் போன்று பாடசாலைக்கு வெளியேயும் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் மாணவர்களின் பாதுகாப்புத் தொடர்பாக முழுமையாக உறுதிப்படுத்தல்.

(ஈ) மேலதிக தகவல்கள் மற்றும் மேலதிக தகவல்களை வழங்கும் முறைகளை இனங்காண்பதற்கு எதிர்பார்க்கும் மாணவ மாணவிகள் தம்மிடம் அச்சமின்றி வருவதற்குத் தேவையான சந்தர்ப்பத்தினை வழங்குதல்.

(உ) நேரடியாக அல்லது மறைமுகமாக தமது பாடங்களுக்கு அல்லது பாடத்தில் உள்ளடக்க வேண்டிய விடயங்கள், மாணவர் ஒழுக்கம் மற்றும் அது தொடர்பான செயற்பாடுகளைத் தவிர ஏனைய பயனற்ற விடயங்கள் குறித்து மாணவர்களுடன் கலந்துரையாடுவதில் இருந்து தவிர்ந்திருத்தல்.

## 6.4. ஆசிரியர் ஆக்கத்திறன்மிக்க வழிகாட்டுநர் மற்றும் ஆலோசகராக இருத்தல்

தமது பொறுப்பிலுள்ள மாணவர்களின் வழிகாட்டுநர் மற்றும் ஆலோசகராக அதியுயரிய பணிகளை ஆசிரியர் மேற்கொள்ள வேண்டி ஏற்படும் என்பதனைக் கருத்திற்கொண்டு

(அ) தமது மாணவரின் ஆத்ம அபிமானத்துக்கும் மற்றும் ஆத்ம கௌரவத்திற்கும் பாதிப்புக்கள் ஏற்படுத்தக்கூடிய அவர்களிடையே ஏற்படும் எதிர்மறையான சிந்தனைகள் மற்றும் வெளிப்பாடுகளை வெளியிடச் சந்தர்ப்பங்கள் வழங்காதிருத்தல் வேண்டும்.

## 6.5. ஆசிரியர் மதிப்பீட்டாளராக

மதிப்பீடுகளை மேற்கொள்ளல் மற்றும் மேற்பார்வையைக் கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகளில் முக்கியத்துவம் வாய்ந்த அங்கமாகக் கருத்திற்கொள்ளல்.

(அ) தம்மால் மேற்கொள்ளப்படும் மதிப்பீடுகள் மற்றும் மேற்பார்வைகளை நியாயமாகவும், பக்கச் சார்பின்றியும் உண்மையாகவும் உறுதிப் படுத்தல் வேண்டும்.

## 6.6. ஆசிரியர் வாண்மை மிக்கவராக

தமக்கு உத்தரவிடப்படும் மற்றும் தம்மால் பின்பற்றப்படும் உயரிய பண்புகளுக்கு அமைய ஆசிரியத் தொழிலின் கௌரவம் தங்கியிருப்பதனைக் கருத்திற்கொண்டு

(அ) பதவியுயர்வின் போது தமக்கு அநீதி ஏற்பட்டுள்ளதாகக் கருதப்படும் வேளையிலும் கூடத் தமது உரிமையினை மாத்திரம் சமர்ப்பித்து தமது தொழிலுக்குப் பொருத்தமற்ற விடயங்களில் ஈடுபடாது இருத்தல் வேண்டும்.

(ஆ) ஆசிரியத் தொழிலின் கௌரவம் தங்கியிருப்பது சகல ஆசிரியர்களினாலும் தொழில் விழுமியங்களைப் பின்பற்றுவதனைக் கருத்திற் கொண்டு, தமது தொழில்சார் அபிமானத்திற்குப் பங்கம் ஏற்படாதவாறு செயற்படுவதன் மூலமாகும்.

## 6.7. ஆசிரியர் முகாமைத்துவத்தின் பொறுப்பாளராக

(அ) நிர்வாக ஒழுங்கு விதிகள், உயரிய முகாமைத்துவம் தொடர்பில் தமக்குள்ள பொறுப்புக்கள் குறித்துச் சிறந்த அறிவினைப் பெற்று அம்முகாமைத்துவ ஆலோசனைகளைப் பின்பற்றல் மற்றும் பிரச்சினைகளுக்குரிய சந்தர்ப்பங்களில் அவை தொடர்பில் விரிவான அடிப்படையில் அமைதியாக வினவுதல்.

(ஆ) தமது தொழில்சார் கௌரவத்தினைப் பாதுகாக்கக் கூடியவாறு தமது நிறுவனத்தின் அபிவிருத்திச் செயற்பாடுகளை மேற்கொள்ளல்.

## 6.8. சமூகம் மற்றும் தேசத்தின் முன்னோடியாக

ஆசிரியர் சமூகம் மற்றும் தேசத்தின் முன்னோடியாக மிக முக்கியத்துவம் வாய்ந்த பணிகளை நிறைவேற்றுவதாகக் கருதி,

(அ) தமது பாடசாலைக்கு, சமூகத்துக்கு, நாட்டுக்கு, தேசத்தின் மீது பற்றுள்ளவராக இருக்க வேண்டியதுடன் அவ்வாறான மாணவர் பரம்பரையினையும் கட்டியெழுப்பப் பங்களிப்புச் செய்தல்.

(ஆ) தேசிய நல்லிணக்கத்தினை ஏற்படுத்தக் கூடியவாறு மாணவர் களிடையே சிறந்த சிந்தனைகள், விழுமியங்களை விருத்தி செய்தல்.

(இ) சமூகப் பிரச்சினைகளை இனங்கண்டு அப்பிரச்சினைகள் ஊடாக உருவாக்கப்பட்ட சவால்களை எதிர்கொள்ளக் கூடியவாறான செயற்பாடுகளில் ஈடுபடல் மற்றும் மாணவர்களையும் அவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுத்தல்.

**07. தயவு செய்து இந்தப் பொதுச் சட்டத் தொகுப்பில் குறிப்பிடப் பட்டுள்ள வாசகங்கள் மீது தங்களின் விசேட கவனத்தினைச் செலுத்தி அதற்கமையச் செயற்படுமாறு தங்களுக்கு அறியத்தருகிறேன்.**

எஸ்.எம். கோடாபய ஜயரட்ண,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

பிரதிகள் :

1. ஜனாதிபதி செயலாளர்
2. தேசிய கல்வி ஆணைக்குழுச் சபையின் தலைவர்
3. தேசிய கல்வி நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம்
4. பரீட்சை ஆணையாளர் நாயகம்
5. கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்
6. கல்வி அமைச்சின் சகல பதவிநிலை உத்தியோகத்தர்கள்
7. சகல கல்விக் கல்லூரிகளினதும் பீடாதிபதிகள்
8. சகல ஆசிரிய, அதிபர்கள்